# சொற்கள் , தொடர்கள் அறிமுகம்

## புதிய சூழலும் அதற்குரிய **சொற்களும்**

ஒவ்வொரு வாரமும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப்
புதிய ஒரு சூழலை அறிமுகப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் எதிர்கொள்கிற சூழல்களை வரிசைப்படுத்தி
அவற்றுள் அதிக பயன்பாட்டுடைய சூழலைத் தேர்ந்தெடுக்கவும்

அந்தச் சூழலில் காணப்படுகிற பொருள்கள் ,
செயல்களின் பெயர்களைப் பட்டியலிடவும்.
சூழலில் பயன்படுகிற பேச்சுகளை வரிசைப்படுத்தி
அவற்றை வினாவழியில் விளங்கிக் கொள்வதாக
உரையாடல் வழியில் புரிந்து கொள்வதாக
முறைபடுத்தவும். எளிய உரையாடல்களை வடிவமைக்கவும்.

இந்த உரையாடல்களை , பேசுவதற்கான தொடர்களை
வகுப்பறையில் உரையாடலாக நிகழ்த்திக் காட்டி
தமிழில் எவ்வாறு உரையாடுவது என்பதை
மாணவர்கள் உள்வாங்கச் செய்யவும்.

**உரையாடல்கள் அயற்சொற்களற்ற தெளிதமிழாகவும்
எளிய சொற்களாகவும் , அதிகப் பயன்பாடு உடையதாகவும்
வினா விடையில் அமைந்ததாகவும் உருவாக்கவும் .**

# உயிரெழுத்து " ஊ " அறிமுகம்




ஊ எழுத்தை ஒலித்துப் பழகவும்
ஊ எழுத்தை எழுதிப் பழகவும்
ஊ எழுதில் தொடங்கும் மேலுள்ள
சொற்களைப் படித்துப் பழகவும்

சொற்களுக்கான பொருள் உணரவும்
ஊ எழுத்தைச் செய்தித்தாளில்
வட்டமிட்டு அடையாளம் காணவும்

# வாரம் - 31 பாட வளர்ச்சி

## ஊ - வரிசை எழுத்துகள்




உ வரிசை எழுத்துகள் அடிப்படையான மூன்று வகையான வடிவங்களில் அமைகின்றன

பூ சூ தூ

| ஊ | ஊ | ஊ |
|---|---|---|
| ூ | ூ | ூ |

**செய்தித்தாளில் ஊ வரிசை எழுத்துகளை வட்டமிடச் செய்யவும்**

# வாரம் - 31

# எழுத்து அறிவோம்

## மெய் + உயிர் = உயிர்மெய்

| | | |
|---|---|---|
| க் + ஊ = கூ | ய் + ஊ = யூ | ங் + ஊ = ஙூ |
| ச் + ஊ = சூ | ர் + ஊ = ரூ | ஞ் + ஊ = ஞூ |
| ட் + ஊ = டூ | ல் + ஊ = லூ | ண் + ஊ = ணூ |
| த் + ஊ = தூ | வ் + ஊ = வூ | ந் + ஊ = நூ |
| ப் + ஊ = பூ | ழ் + ஊ = ழூ | ம் + ஊ = மூ |
| ற் + ஊ = றூ | ள் + ஊ = ளூ | ன் + ஊ = னூ |

ஊ வரிசை உயிர்மெய் எழுத்துகள்
புதிய வடிவம் பெறுகின்றன.
ஊ வரிசை உயிர்மெய் எழுத்துகள் மீது
எழுத்தை ஒலித்துக் கொண்டே எழுத
மாணவர்களை ஊக்குவிக்கவும் .
ஒரு முறைக்கு இரண்டு முறை
எழுதிப் பழக எழுத்து நினைவில் நிற்கும்

வாரம் - 31 பாட வளர்ச்சி

## ஊ - வரிசை எழுத்துகள்

30

கூட்டம், கூறு, கூட்டல், கூடு,
கூடாரம், கூத்து, கூர்மை,
கூலி, கூண்டு, சூடு, சூடம்,
சூழ்ச்சி, சூதாட்டம், தூக்கம்,
தூரம், தூவல், தூள்,
பட்டாம்பூச்சி, பூட்டு, பூனை,
பூரான், நூல், மூலை,
மூக்கு, மூங்கில், மூன்று,
மூட்டை, மூடு, மூதுரை,
மூத்தோர், மூலை, மூளை

மேலுள்ள சொற்களை மாணவர்கள் தாங்களாகவே எழுத்துக்கூட்டி படிக்க ஊக்குவிக்கவும். ஆசிரியர் சொல்லித்தரக் கூடாது அவர்களாகவே முயற்சி செய்ய ஊக்குவிக்கவும் ஒலிக்கத் தடுமாறும் பொழுது உதவலாம்

செய்தித்தாளில் ஊ **வரிசை எழுத்துகளை** வட்டமிட்டு அதனைக் கரும்பலகையில் எழுதி ஒலிக்கப் பயிற்சி தரவும் .

# வாரம் - 31

மாணவர் செயற்பாடு

மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............

ஊ வரிசையின் 18 எழுத்துகளையும் கீழே எழுதவும்.

ஊ வரிசையின் 18 எழுத்துகளையும் செய்தித்தாளில் வட்டமிடவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## வாரம் - 31 வீட்டு வேலை

மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............

**ஊ வரிசையின் 18 எழுத்துகளையும் கீழே எழுதவும்.**

**ஊ வரிசையின் 18 எழுத்துகளையும் செய்தித்தாளில் வட்டமிடவும்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |